Australian BORDER FORCE

வெளி நாடுகளிலிருந்து ஆஸ்திரேலியா வந்து சேரும் பயணிகளுக்கான ‘கட்டாயத் தொற்றுத்தடைக் காப்பு’ குறித்த முக்கியமான தகவல்கள்

# வெளிநாடுகளிலிருந்து ஆஸ்திரேலியா வந்து சேரும் பயணிகளுக்கான ‘கட்டாயத் தொற்றுத்தடைக் காப்பு’ குறித்த முக்கியமான தகவல்கள்

13 ஆகஸ்ட்டு 2020

‘கோவிட்-19’ பெருந்தொற்றிற்கான எதிர் நடவடிக்கையாக பயணக் கட்டுப்பாடுகளையும், கட்டாயத் தொற்றுத்தடைக்காப்புத் தேவைப்பாடுகளையும் ஆஸ்திரேலிய அரசாங்கம் நடைமுறைப்படுத்தியுள்ளது.

**ஆஸ்திரேலியா வந்து சேரும் அனைத்துப் பயணிகளும், அவர்கள் ஆஸ்திரேலியாவில் இறங்கும் முதல் ஊரில் 14 நாட்களுக்குக் கட்டாயத் தொற்றுத் தடைக்காப்பில் வைக்கப்படுவார்கள்.**

இந்த நாட்களில் பயணிகளுக்குத் தகுந்த தங்குமிடம் ஏற்பாடு செய்துதரப்படும், மற்றும் இந்தக் கட்டாயமாக வேண்டப்படும் 14 நாட்களுக்கான தொற்றுத்தடைக் காப்பு முடியும் வரை உள்நாட்டில் பயணிப்பதற்கு (அவர்களது வீடு உட்பட), அல்லது உள் நாட்டு இணைப்புப் பயணங்களை மேற்கொள்வதற்கு அவர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

ஆஸ்திரேலிய அரசாங்கத்தின் உதவியுடன், மாநில மற்றும் எல்லைப்பகுதி அரசுகள் தொற்றுத்தடைக் காப்பு ஏற்பாடுகளை நிர்வாகம் செய்யும். தொற்றுத்தடைக் காப்பிற்கு ஆகும் செலவிற்கு ஒரு பங்களிப்பைச் செலுத்துமாறு பெரும்பாலான மாநிலங்களும் எல்லைப்பகுதிகளும் உங்களைக் கேட்கும். மேலதிகத் தகவல்களைத் தக்க மாநில மற்றும் எல்லைப்பகுதி அரசுகளின் சுகாதாரத் திணைக்கள வலைத்தலங்களில் நீங்கள் காணலாம்.

**இடை-வழிப் பயணிகள் (Transit passengers)**

ஆஸ்திரேலியாவில் இறங்கும் சர்வதேச இடை-வழிப் பயணிகள் அவர்கள் இறங்கும் நகரத்திலிருந்து புறப்படும் இன்னொரு சர்வதேச விமானத்தின் மூலம் வெளியேறலாம். இடை-வழிப் பயணிகள் கட்டாயமாகச் செய்யவேண்டியவை:

- உங்களுடைய அடுத்த விமானத்திற்கு நீங்கள் காத்திருக்கவேண்டும் என்றால், 8 மணித்தியாலங்கள் வரைக்குமான நேரத்திற்கு நீங்கள் விமான நிலையத்திலேயே காத்திருக்கவேண்டும்
- 8-இல் இருந்து 72 மணித்தியாலங்கள் வரைக்குமான நேரத்திற்கு மேல் நீங்கள் உங்களுடைய அடுத்த விமானத்திற்காகக் காத்திருக்க வேண்டுமானால், மாநில அரசினால் ஒதுக்கப்பட்டுள்ள கட்டாயத் தொற்றுத்தடைக் காப்பு இடத்திற்குச் சென்று அங்கு நீங்கள் காத்திருக்கவேண்டும்

இன்னொரு நகரத்திலிருந்து புறப்படும் ஒரு விமானத்தைப் பிடிப்பதற்காகக் கூட, இடை-வழிப் பயணிகள் ஆஸ்திரேலியாவிற்குள்ளாகப் பயணிக்க இயலாது.

**ஆஸ்திரேலியாவில் இறங்கும்போது எதிர்பார்க்கவேண்டியவை:**

- ஆஸ்திரேலியாவில் நீங்கள் இறங்கும்போது, விமானப் பணியாளர்கள் மற்றும் அரசாங்க அதிகாரிகளால் உங்களுக்குக் கொடுக்கப்படும் அனைத்து அறிவுறுத்தல்களையும் நீங்கள் பின்பற்ற வேண்டியிருக்கும்.

- உங்களுடைய பயணப் பெட்டிகளை எடுத்துக்கொண்டு பொதுவான எல்லைக் கடப்புச் செயல்முறைகள் ஊடாக நீங்கள் செல்லவேண்டும் (சுங்கம், குடிவவு மற்றும் கிருமித்தொற்றுப் பாதுகாப்பு).

Australian
BORDER FORCE

வெளி நாடுகளிலிருந்து ஆஸ்திரேலியா வந்து சேரும் பயணிகளுக்கான 'கட்டாயத் தொற்றுத்தடைக் காப்பு' குறித்த முக்கியமான தகவல்கள்

- எல்லைக் கடப்பு செயல்பாட்டிற்குப் பிறகு நீங்கள் தங்கும் இடத்திற்கு உங்களை அழைத்துச் செல்லும் பேருந்துகளுக்கு அரசாங்க அதிகாரிகள் உங்களை வழிநடத்துவார்கள்.

- உங்களுடைய தங்குமிடத்திற்கு நீங்கள் வந்து சேரும் வரை நீங்கள் கணிசமான நேரத்திற்குக் காத்திருக்க வேண்டியிருக்கலாம். இப்படிக் காத்திருக்கும் நேரத்தில் நீங்கள் வசதியாக இருப்பதற்கான இயன்ற ஏற்பாடுகளைச் செய்ய அரசாங்க அதிகார்கள் முயற்சி செய்வார்கள். உங்களுடைய ஒத்துழைப்பையும், பொறுமையையும் பாராட்டுகிறோம்.

**உங்களுடைய 14 நாட்கள் தொற்றுத்தடைக் காப்பு காலத்திற்கான ஏற்பாடுகள்**

- தொற்றுத்தடைக் காப்பு தங்குமிடத்தில் அரசாங்க அதிகாரிகள் உங்களுடைய வருகைக்காகக் காத்திருப்பார்கள். வந்து சேர்ந்ததும் நீங்கள் கேட்கும் கேள்விகள் எதற்கும் அவர்கள் தாராளமாகப் பதிலளிப்பார்கள், மற்றும் உங்களுடைய தொற்றுத்தடைக் காப்புக் காலத்தில் உங்களுக்கு உதவியாக இருப்பார்கள்.

- நீங்கள் தங்கியிருக்கும் காலத்தில் உங்களுக்குத் தேவைப்படும் வசதிகளும் சேவைகளும் நீங்கள் தங்கும் இடத்தில் கிடைக்கும். பாதுகாப்பான மற்றும் சுகாதாரமான வசிப்பிடம், உணவு மற்றும் நீர் மற்றும் மருத்துவ உதவி ஆகியன நீங்கள் தங்குமிடத்தில் கிடைக்கும்.

- நீங்கள் தவறாமல் எடுத்துவரும் மருந்துகளுக்கான மருந்துச்சீட்டுகள் போன்ற மருத்துவத் தேவைகள் உங்களுக்கு இருந்தால், இந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும்.

- முதல் 48 மணித்தியால நேரத்திலும், உங்களுடைய தொற்றுத்தடைக் காப்பு காலத்தின் 10 முதல் 12 வரைக்குமான நாட்களுக்குள்ளாகவும் 'கோவிட்-19' நோயறிவுச் சோதனை ஒன்று உங்களுக்குச் செய்யப்படலாம். சோதனையை மேற்கொள்ள நீங்கள் மறுத்தால், இன்னும் அதிகமான நாட்களுக்கு நீங்கள் தொற்றுத்தடைக் காப்பில் இருக்க வேண்டியிருக்கலாம். சரியான சோதனை

முறைகள் என்ன என்பது மாநிலங்கள் மற்றும் எல்லைப்பகுதிகளைப் பொறுத்து அமையும்.

- 'கிருமித்தொற்றுப் பாதுகாப்பு சட்டம் 2015' (Biosecurity Act 2015) மற்றும் பொருந்திவரும் மாநில சட்டங்களின் பிரகாரம், ஆஸ்திரேலிய சமூகத்தில் நீங்கள் நுழையலாம் என்று மருத்துவரீதியாக விடுவிக்கப்படும் வரை உங்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள தங்குமிடத்திலேயே இருக்குமாறு நீங்கள் வேண்டப்படுவீர்கள்.

இந்த ஏற்பாடுகளை மாநில மற்றும் எல்லைப்பகுதி அரசுகள் அமல்படுத்தும் மற்றும் ஆஸ்திரேலிய அரச முகமைகள் இவற்றிற்கு ஆதரவுதவி அளிக்கும்.

**உங்களுடைய 14 நாட்கள் தொற்றுத்தடைக் காப்பு காலத்தின் பூர்த்தி**

கட்டாயத் தொற்றுத்தடைக் காப்பு காலத்தினை நீங்கள் பூர்த்தி பூர்த்தி செய்ததும், நீங்கள் ஆஸ்திரேலியாவிற்குள்ளாகப் பயணிக்கலாம். மாநிலங்களும், எல்லைப்பகுதிகளும் அவற்றிற்கான உள்நுழைவு மற்றும் தொற்றுத்தடைக் காப்புத் தேவைப்பட்டுகளைக் கொண்டிருக்கலாம் என்பதை நினைவில் கொள்ளுங்கள். நீங்கள் போய்ச் சேர்வதற்கு

Australian
BORDER FORCE

# வெளி நாடுகளிலிருந்து ஆஸ்திரேலியா வந்து சேரும் பயணிகளுக்கான ‘கட்டாயத் தொற்றுத்தடைக் காப்பு’ குறித்த முக்கியமான தகவல்கள்

முன்பாக ஒவ்வொரு மாநிலத்திற்கும், எல்லைப்பகுதிக்குமான உள்நுழைவு மற்றும் தொற்றுத்தடைக் காப்புத் தேவைப்பட்டுகள் என்ன என்பதை நீங்கள் சோதித்துத் தெரிந்துகொள்ளவேண்டும்.

பயணக் கட்டுப்பாடுகள் குறித்த மாநில மற்றும் எல்லைப்பகுதித் தகவல்களுக்கான வலைத்தல இணைப்புகள் ஆஸ்திரேலிய அரச ‘சுகாதாரத் திணைக்கள’(The Australian Government Department of Health)த்தின் வலைத்தலத்தில் உள்ளன:
*https://www.health.gov.au/news/health-alerts/novel-coronavirus-2019-ncov-health-alert/coronavirus-covid-19-restrictions/coronavirus-covid-19-advice-for-international-travellers#quarantine-for-incoming-travellers*